**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.157/மா/2025
நாள்16.12.2025

R. மயில்சாமி
மதுரை ....... முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்
மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி ...... எதிர் மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 20.3.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.03.2025 அன்று பெறப்பட்டு 157/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் 20.3.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண் 80, கதவு எண் 10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெரு, மதுரை–11ல் இயங்கி வரும் Dr. சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் 11569.82 சதுரடிகள் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் அரசு விதிகளின்படி ஆறு (6) மீட்டர் இடைவெளி இடம் விடாமல் வடக்குபுறம் மற்றும் தென்புறத்தில் இடைவெளி ஏதும் விடவில்லை. கட்டிடத்தின் கிழக்கே 2.6 அடி இடைவெளி இடமும், மேற்கே 5.6 அடி இடைவெளி இடம் விட்டு சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதால் விபத்து காலங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை – ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர இயலாத நிலையில் Dr. சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி ஆணையர், மதுரை மாநகராட்சி மற்றும் உதவி ஆணையர் மண்டலம் 5 (மேற்கு) திருப்பரங்குன்றம்

அவர்களுக்கு 30.01.2025 தேதியில் புகார் மனு பதிவு தபாலில் அளித்தும் இன்று வரையிலும் மேற்படி மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் மேற்படி மருத்துவமனை கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். ஆனால் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் எனது புகார் மனுவை பெற்றுக் கொண்டதில் இருந்து அரசாணை (நிலை) எண் 99, பணியாளர் மற்றும் நிருவாகம் சீர்திருத்தத்(ஏ) துறை நாள் 21.09.2015–ன்படி 3 மூன்று தினங்களில் ஒப்புகை இரசீது அளித்தும் முப்பது தினங்களுக்குள் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் உதவி ஆணையர் மண்டலம் 5 (மேற்கு) அவர்கள் இதுநாள் வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை.

மேற்படி அரசாணையின்படி முப்பது தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்க தவறிய உரிய அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் Dr. சிதம்பரம் மருத்துவமனை கட்டிடத்தினை கண்காணிக்கத் தவறிய உதவி ஆணையர், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் இதர அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

எனது புகார் மனுவில் கூறப்பட்ட சிதம்பரம் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் மற்றும் நான்குபுறமும் இடைவெளி இடம் விடாமலும் (Set Back) மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டும், இதனால் அரசுக்கு பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பீடு செய்த மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023 உத்தரவின்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர், 807 அண்ணா சாலை, சென்னை அவர்கள் கடிதம் நாள் 03.01.2017 ஆணையின்படியும், மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவன்புடனும் வேண்டிக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் உதவி ஆணையர், மண்டலம் 5 (மேற்கு), மதுரை மாநகராட்சி அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி உதவி ஆணையர், மண்டலம் 5 (மேற்கு), தனது 08.11.2025 நாளிட்ட அறிக்கை எண் ம5/A1/005246/25–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண்.80, கதவு எண்.10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெருவில் உள்ள Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனைக்கு பின்வருமாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| கட்டிடத்தின் விபரம் | தரைத்தளம் (ச.அடி) | முதல் தளம் (ச.அடி) | இரண்டாம் தளம் (ச.அடி) | கட்டிட அனுமதி எண். மற்றும் தேதி |
|---|---|---|---|---|
| கிளினிக் | 536.75 | 536.75 | 434.00 | அனுமதி எண் 339/2009 தேதி 11.09.2009 |
| வணிகம் (Commercial) | 986.84 | 986.84 | -- | அனுமதி எண் 1/2016 தேதி 05.01.2016 |
| குடியிருப்பு (Residential) | 530.00 | 302.00 | -- | அனுமதி எண் 115/BL/2022/02787 |

மேற்படி மருத்துவமனை கட்டிடத்தில் அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்ட அளவுகள் பின்வருமாறு உள்ளது.

| தளத்தின் விபரம் | கட்டிடம் கட்டப்பட்ட அளவு (ச.அடி) | அனுமதி வழங்கப்பட்டது (ச.அடி) | கூடுதல் அளவுகள் (ச.அடி) |
|---|---|---|---|
| தரைத்தளம் | 5850.00 | 2053.59 | 3796.41 |
| முதல் தளம் | 5850.00 | 1825.59 | 4024.41 |
| இரண்டாவது தளம் | 4183.00 | 434.00 | 3749.00 |

மேற்படி மாறுதலாக கட்டியுள்ள கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 282, 296 (1)& (2) பிரிவுகளின்படி (Z5A2/000699/22) 29.03.2023 அன்று அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022ல் திருத்தப்பட்டது – பிரிவு 135 (4)–ன் கீழ் 25.02.2025 தேதியிட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது.

மேற்படி Dr. சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதி வேண்டி அரசு முதன்மை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்களுக்கு கோப்பு எண் 10878414/ந.வ.5(1)/2025 நாள் 20.06.2025ல் கட்டிட அனுமதி வேண்டி மேல்முறையீடு செய்துள்ளார் மற்றும் மேற்படி கட்டிடம் சம்மந்தமாக மேல்நடவடிக்கை வேண்டி மதுரை மாநகராட்சி மூலம் மாவட்ட உயர்மட்ட கண்காணிப்பு குழுவிற்கு பரிந்துரை செய்ய தயார் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி கட்டிடம் தொடர்பாக திரு. மயில்சாமி என்பவர் வழக்கு எண்.W.P (MD)No.15343/2025 சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, மேற்படி வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 11.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 11.11.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆனால் 06.11.2025 நாளிட்ட தனது கடிதத்தில் "முறையீட்டு மனு எண் 157/மா/2025 நாள் 28.11.2025 சிதம்பரம் மருத்துவமனை கட்டிடத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை W.P. (MD) No.15343/2025ல் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மதுரை மாநகராட்சி , மண்டலம் 5 (மேற்கு)—ன் உதவி நகர திட்ட அலுவலர் 11.11.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்:—

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண் 80, கதவு எண்10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெருவில் உள்ள Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனைக்கு பின்வருமாறு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| கட்டிடத்தின் விபரம் | தரைத்தளம் (ச.அடி) | முதல் தளம் (ச.அடி) | இரண்டாம் தளம் (ச.அடி) | கட்டிட அனுமதி எண். மற்றும் தேதி |
|---|---|---|---|---|
| கிளினிக் | 536.75 | 536.75 | 434.00 | அனுமதி எண்.339/2009 தேதி 11.09.2009 |
| வணிகம் (Commercial) | 986.84 | 986.84 | —— | அனுமதி எண்.1/2016 தேதி 05.01.2016 |
| குடியிருப்பு (Residential) | 530.00 | 302.00 | —— | அனுமதி எண். 115/BL/2022/02787 |

மேற்படி மருத்துவமனை கட்டிடத்தில் அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்ட அளவுகள் பின்வருமாறு:—

| தளத்தின் விபரம் | கட்டிடம் கட்டப்பட்ட அளவு (ச.அடி) | அனுமதி வழங்கப்பட்டது (ச.அடி) | கூடுதல் அளவுகள் (ச.அடி) |
|---|---|---|---|
| தரைத்தளம் | 5850.00 | 2053.59 | 3796.41 |
| முதல் தளம் | 5850.00 | 1825.59 | 4024.41 |
| இரண்டாவது தளம் | 4183.00 | 434.00 | 3749.00 |

மேற்படி மாறுதலாக கட்டியுள்ள கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 282, 296 (1) & (2) பிரிவுகளின்படி 29.03.2023 அன்று அறிவிப்பு செய்யப்பட்டும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022ல் திருத்தப்பட்டது — பிரிவு 135 (4)—ன் கீழ் 25.02.2025 தேதியிட்ட அறிவிப்பும் சார்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சென்னை—9 அவர்களுக்கு 20.06.2025ல் கட்டிட அனுமதி வேண்டி பிரிவு 80(A) கீழ் மேல்முறையீடு செய்து தற்போது வரை நிலுவையில் உள்ளது. மேலும் மருத்துவமனை கட்டிடம் சம்பந்தமாக மேல் நடவடிக்கை வேண்டி மதுரை மாநகராட்சி மூலம் மாவட்ட உயர் மட்ட கண்காணிப்பு குழுவிற்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி கட்டிடம் தொடர்பாக மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி வழக்கு எண்.W.P (MD)No.15343/2025 மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே, மேற்படி வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் மதுரை மாநகராட்சியால் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் முறையீட்டு மனு, மனுதாரரின் 06.11.2025 நாளிட்ட கடிதம் மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, உதவி நகர திட்ட அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண் 80, கதவு எண் 10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெரு, மதுரை–11ல் இயங்கி வரும் Dr. சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் 11569.82 சதுரடிகள் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும் விபத்து காலங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை – ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர இயலாத நிலையில் உள்ளது என்பதும் Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால், நான்குபுறமும் இடைவெளி இடம் விடாமலும் (Set Back) மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தில் திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது என்பதும் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படியும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் நாள் 03.01.2017 ஆணையின்படியும், மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition தாக்கீதுகள் வழங்கி விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மற்றும் மேற்படி கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் W.P.(MD) எண்15343/2025 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும் மனுதாரர் மனு மற்றும் கடிதம் மூலம் அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண்.80, கதவு எண்.10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெருவில்உள்ள Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனைக்கு கட்டிட அனுமதி மதுரை மாநகராட்சியால் 11.09.2009 மற்றும் 05.01.2016 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடம் அனுமதிக்கு மாறாக கட்டியுள்ளதால் கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 282, 296 (1)& (2) பிரிவுகளின்படி 29.03.2023 அன்று அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 35) 2022ல் திருத்தப்பட்டது – பிரிவு 135 (4)–ன் கீழ் 25.02.2025 தேதியிட்ட அறிவிப்பும் சார்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சென்னை–9 அவர்களுக்கு 20.06.2025ல் கட்டிட அனுமதி வேண்டி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 80(A) கீழ் மேல்முறையீடு செய்து தற்போது வரை நிலுவையில் உள்ளது என்பதும் மேலும் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் சம்பந்தமாக மேல் நடவடிக்கை வேண்டி மதுரை மாநகராட்சி மூலம் மாவட்ட உயர் மட்ட கண்காணிப்பு குழுவிற்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மேலும், மனுதாரர் திரு. ஆர்.மயில்சாமி அவர்கள் மேற்கண்ட மருத்துவமனை தொடர்பாக வழக்கு எண் W.P.(MD) No.15343/2025 மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்பதும், மேற்கண்ட வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது என்பதும் மேற்படி வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மதுரை மாநகராட்சியால் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி நகர திட்ட அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறியமுடிகிறது.

8. இந்நேர்வில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண்.80, கதவு எண்.10, ஜெய்ஹிந்த்புரம் 2வது மெயின் ரோடு, வள்ளுவர் வடக்கு தெருவில் உள்ள Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை கட்டிடம் சம்பந்தமாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் W.P.(MD) No.15343/2025 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது தெரிய வருகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act,1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தெரிவித்துள்ள Dr.சிதம்பரம் மெமோரியல் மருத்துவமனை சம்பந்தமாக, மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மனுதாரரின் 20.3.2025 நாளிட்ட மனுமீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் நெ. 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், புதுவிளாங்குடி, மதுரை– 18.

(2) ஆணையர், மதுரைமாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை.

(3) உதவி ஆணையர், மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி, மதுரை.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

19/12/25
செயலாளர்

19.12.25

2/16

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032